புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்

38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635    T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS

மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்

காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 273 | 08-04-2026 | புதன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி

Volum 01 | Issue: 273 | 08-04-2026 | Wednesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## இந்தியாவுக்கு முதலிடம் என்பதே எங்களது தாரக மந்திரம்: பாஜக 47வது நிறுவன தினத்தில் பிரதமர் மோடி பெருமிதம்



புதுடெல்லி: ஏப்.8

பாஜகவின் 47வது நிறுவன நாளை முன்னிட்டு, நாடு முழுவதும் உள்ள கட்சித் தொண்டர்களுக்குப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று வாழ்த்துகளைத் தெரிவித்தார். மேலும், எதிலும் இந்தியாவுக்கே முதலிடம் என்ற கொள்கையின் அடிப்படையில் பாஜக தொடர்ந்து இயங்கி வருவதாக அவர் பெருமிதத்துடன் கூறினார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: பாஜக எப்போதும் தேச நலனுக்கே முன்னுரிமை அளித்து வருகிறது. சமூக சேவை செய்வதிலும், நாட்டை முன்னேற்றுவதிலும் எமது கட்சி முன்னணியில் நிற்கிறது. அடிமட்ட அளவில் தன்னலமற்ற சேவையைத் தொடர்ந்து வழங்கி வரும் லட்சக் கணக்கான தொண்டர்களின் உழைப்பால் கட்சியின் சித்தாந்தம் கடைக்கோடி மக்களையும் சென்றடைந்துள்ளது.

கடந்த பல தசாப்தங்களாகக் கட்சியின் வளர்ச்சிக்காகத் தியாகம் செய்த எண்ணற்ற தொண்டர்களின் தியாகத்தை இந்த நாளில் நினைவுகூர்கிறோம். மக்களின் நலனை மையமாகக் கொண்டே மத்திய அரசும், பாஜக ஆளும் மாநில அரசுகளும் செயல்படுகின்றன.

வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை நோக்கிய எங்களது பயணம் தொய்வில்லாமல் தொடரும். நமது கூட்டு உறுதிப்பாடு இந்தியாவை முன்னேற்றத்தின் புதிய உச்சத்துக்கு அழைத்துச் செல்லும். இவ்வாறு பிரதமர் பதிவிட்டுள்ளார்.

## கல்பாக்கம் அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு

கல்பாக்கம்: ஏப்.8–

கல்பாக்கத்தில் உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக ஈனுலை, மாற்ற நிலையை அடைந்துள்ளதற்காக அணுசக்தி விஞ்ஞானிகளுக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், கல்பாக்கத்தில் 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட, புதிய அணுமின் நிலையம் கடந்த 2004ம் ஆண்டிலிருந்து பாவினி என்ற பெயரில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், கடந்த 2024ம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி, மேற்கண்ட புதிய அணுமின் நிலையத்தில் எரிபொருள் நிரப்பும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிலையில், தோரியத்திலிருந்து, நியூட்ரான் பிரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. இது படிப்படியாக முன்னேறி மின் உற்பத்தியை தொடங்கும் நிலையில் உள்ளது. இதுகுறித்து, பிரதமர் நரேந்திர மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், "இந்தியா தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முன்னெடுத்து, தனது அணுசக்தி பயணத்தில் ஒரு தீர்க்கமான அடியை எடுத்து வைத்துள்ளது. கல்பாக்கத்தில், உள்நாட்டிலேயே வடிவமைத்து உருவாக்கப்பட்ட முன்மாதிரி வேக அணு உலை நிலை மாற்ற நிலையை எட்டியுள்ளது.

இந்த மேம்பட்ட அணு உலை, தனது அறிவியல் திறனின் ஆழத்தையும், நமது பொறியியல் முயற்சியின் வலிமையையும் பிரதிபலிக்கிறது. இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தில், நமது பரந்த தோரியம் இருப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு தீர்க்கமான படியாகும். இந்தியாவுக்கு, இதுபெருமைக்குரிய தருணம். நமது விஞ்ஞானிகளுக்கும், பொறியாளர்களுக்கும் வாழ்த்துக்கள்" என தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

## காமராஜ் நகர் தொகுதியில் இறுதிக்கட்ட பிரச்சாரத்தை உற்சாகமாக நிறைவு செய்தார் ஜோஸ் சார்லஸ் மார்டின்...



புதுச்சேரி, ஏப்.8–

புதுச்சேரி காமராஜ் நகர் தொகுதியில் லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை சிறப்பாக நிறைவு செய்தார். திறந்த வெளி வாகனத்தின் சாரம் பகுதியில் இருந்து புறப்பட்ட அவர், வெங்கடேஸ்வரா நகர், பாலாஜி நகர், அண்ணாமலை நகர், கிருஷ்ணா நகர், ரெயின்போ நகர், தேவகி நகர்,சங்கரதாஸ் நகர் , கென்னடி கார்டன்,

சாமிப்பிள்ளை, வள்ளலார் சாலை, தோட்டம், உள்ளிட்ட பல பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

தொகுதி முழுவதும் வாகனத்தில் நின்றபடி பொதுமக்களுக்கு கையசைத்து வணக்கம் தெரிவித்த அவர், தாம் போட்டியிடும் தர்பூசணி சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். குறிப்பாகவாக்குச்சீட்டில் 6ஆம் எண்ணில் உள்ள தர்பூசணி சின்னத்திற்கு ஆதரவு தருமாறு மக்களிடம் வலியுறுத்தினார்.

சாலையோரங்களில் திரண்டிருந்த மக்கள் அவரை வரவேற்று கையசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர். இதனால் பிரச்சாரத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. தொடர்ந்து, அவரது ஆதரவாளர்கள் இரு புறங்களிலும் இருசக்கர வாகனங்களில் புடைசூழ்ந்து சென்றனர்.

அப்போது ஜோஸ் சார்லஸ் மார்டின் பேசுகையில், "வெற்றியின் சின்னம், நியாயத்தின் சின்னம், நேர்மையின் சின்னம் ரூ சத்தியத்திற்கு வாக்களியுங்கள்" என பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தார். மேலும், எளிமையான மனிதராக மக்களுடன் நெருக்கமாக பழகி அவர்களின் ஆதரவை பெற்றார்.

# தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு நாளில் அச்சு ஊடக விளம்பரம் செய்ய முன்சான்றளிப்பு பெற வேண்டும்: இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை: ஏப்.8–

தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களில் வாக்குப்பதிவு நாளன்று அச்சு ஊடக விளம்பரம் செய்ய முன் சான்றளிப்பு பெற வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து இந்திய தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: பொதுத்தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்களில் வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் மற்றும் வாக்குப்பதிவு நாளன்று அச்சு ஊடக விளம்பரங்களுக்கு, ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழுவின் முன்சான்றளிப்பு அளிப்பது தொடர்பாக;

1. அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்குவங்க சட்டப்பேரவைகளுக்கான பொதுத்தேர்தல் மற்றும் 6 மாநிலங்களுக்கான இடைத் தேர்தல் அட்டவணையை இந்திய தேர்தல் ஆணையம் கடந்த மார்ச் 15ம் தேதி அறிவித்தது.

2. நியாயமான தேர்தல் பிரசார சூழலை உறுதி செய்வதற்காக, மாநில/மாவட்ட அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் முன்சான்றளிப்பு பெறாமல், எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ, அமைப்போ அல்லது நபரோ வாக்குப்பதிவு நாளன்றும் மற்றும் வாக்குப்பதிவிற்கு முந்தைய நாளன்றும் அச்சு ஊடகங்களில் எந்த விளம்பரத்தையும் வெளியிடக்கூடாது.

3. தனிநபர்கள் அல்லது போட்டியிடும் வேட்பாளர்கள் விளம்பரங்களுக்கான சான்றளிப்பிற்கு மாவட்ட ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் விண்ணப்பிக்கலாம். ஒரு மாநிலம்/யூனியன் பிரதேசத்தை தலைமையிடமாக கொண்ட அனைத்து பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகளும் அத்தகைய விளம்பரங்களுக்கான சான்றளிப்பிற்கு மாநில அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிடம் விண்ணப்பிக்கலாம்.

4. அதன்படி, தேர்தல் நடைபெறும் மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி அச்சு விளம்பரங்களுக்கு முன் சான்றளிப்பு அவசியம்:

அதன்படி, அசாம், கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் வாக்குப்பதிவு நாளான 9ம் தேதி விளம்பரம் செய்ய 8 மற்றும் 9ம் தேதிக்குள் முன் சான்றிதழ் பெற வேண்டும்.

தமிழ்நாட்டில் 23ம் தேதி விளம்பரம் செய்ய 22.4.2026 மற்றும் 23.4.2026, மேற்குவங்கம் 23ம் தேதி (கட்டம்மி) 29.4.2026 (கட்டம்மிமி) விளம்பரம் செய்ய 22.4.2026 மற்றும் 23.4.2026 மற்றும் 28.4.2026 மற்றும் 29.4.2026க்கு முன் அனுமதி பெற வேண்டும்.

5. அச்சு ஊடகங்களில் அரசியல் விளம்பரங்களுக்கு முன்சான்றளிப்பு கோரும் விண்ணப்பதாரர்கள், விளம்பரம் வெளியிட திட்டமிடப்பட்ட தேதிக்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு குழுவிடம் விண்ணப்பிக்க வேண்டும். அரசியல் விவாதம்

6. சரியான நேரத்தில் முன் சான்றளிப்பு வழங்குவதை எளிதாக்க, மாநில/மாவட்ட அளவிலான ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிக்கள் இத்தகைய விளம்பரங்களை ஆய்வு செய்து முன் சான்றளிக்க தயார் நிலையில் உள்ளன, மேலும் முடிவுகள் விரைவாக எடுக்கப்படுவது உறுதி செய்யப்படும்.

7. ஊடகங்களில் சந்தேகிக்கப்படும் கட்டணச் செய்திகள் குறித்து ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழுவிக்கள் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவதோடு, தகுந்த நடவடிக்கையும் எடுக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடத்த ரூ.1032 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

### தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்

சென்னை: ஏப்.8–

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடத்த ரூ.1032 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். பதற்றமானவை என அடையாளம் காணப்பட்ட 5,938 வாக்குச் சாவடிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. வெப்பத்தை தணிக்க வாக்குச் சாவடி மையங்களில் பந்தல், இருக்கைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . தமிழகத்தில் வரும் ஏப்ரல் 12ம் தேதியும் ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடக்கிறது. மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாக இருக்கிறது. தேர்தல் களம் அனல் பறக்கிறது. வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் ஆணையத்தின் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகத்தில் இதுவரை பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்ட விபரங்களை தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

"தமிழகத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து இதுவரை 462 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம், மதுபானம், போதைப்பொருள் உள்ளிட்டவற்றை பறக்கும் படையினர் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார். 85வயதிற்கு மேற்பட்ட 2.5 லட்சம் பேர் தபால் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளனர்.

## பேரம் பேசுவதும், பிளாக்மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா? ஸ்டாலின் கண்டனம்



சென்னை: ஏப்.8–

பாஜக எம்எல்ஏவைத் தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக் மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா?" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "பாஜக எம்எல்ஏவை தேர்ந்தெடுத்தால்தான் மதுரைக்கு மெட்ரோ தருவோம் என்று பேரம் பேசுவதும், பிளாக் மெயில் செய்வதும்தான் மகாராஷ்டிர முதல்வரின் வேலையா?

அரசியலமைப்பின் மீது உறுதிமொழி ஏற்ற ஒரு முதல்வர், எதிர்க்கட்சி ஆளும் மாநிலத்தில் வந்து இப்படி பேசுவதற்கு வெட்கப்பட வேண்டும். நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் புறக்கணிப்பை மீறி, தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் சாதனைத் திட்டங்கள் எத்தனை என்று அவருக்குத் தெரியுமா?. தெரியாவிட்டால் கேட்டுத் தெரிந்து கொண்டு பேச வேண்டும்.

டபுள் எஞ்சின் என்று நீங்கள் பீற்றும் டப்பா எஞ்சின் மாநிலங்களையும் தாண்டி, திராவிட மாடல் ஆளும் தமிழ்நாடுதான் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை சாதித்துள்ளது என்பது நினைவில் இருக்கட்டும்" எனத் தெரிவித்தார்.

முன்னதாக, மதுரை தெற்கு தொகுதியில் பாஜக வேட்பாளர் ராம.சீனிவாசன் வேட்புமனுத் தாக்கலில் பங்கேற்பதற்காக மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் நேற்று மதுரை வந்தார். அப்போது பேசிய அவர், "மதுரை தெற்கு தொகுதி வேட்பாளர் ராம ஸ்ரீநிவாசன் வெற்றி பெறுவார். அவர் எம்.எல்.ஏ., ஆனதும் பிரதமர் மோடியிடம் அவரை அழைத்துச் செல்வோம். பிரதமரை அவர் சந்தித்ததும் மதுரைக்கு மெட்ரோ ரயில்திட்டம் வந்துவிடும்" என்று பேசியிருந்தார். இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் அதற்கு பதிலடி கொடுத்துள்ளார்.

## இலங்கையிலிருந்து விடுவிக்கப்பட்ட 30 இந்திய மீனவர்கள்: இந்திய தூதரகம் தகவல்

இலங்கை அரசால் விடுவிக்கப்பட்டு, இந்திய தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கையிலிருந்து விடுவிக்கப்பப்பட்ட 30 மீனவர்களும் தற்போது வீடு திரும்பி கொண்டிருக்கின்றனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். விடுவிக்கப்பட்டு உள்ள 30 இந்திய மீனவர்ககளில் 21 பேர் ராமநாதபுரத்தை சேர்ந்தவர்கள்; மற்ற 9 பேர் காரைக்காலைச் சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இந்திய தூதரகத்தின் தொடர் முயற்சிகளால் இவர்கள் இலங்கை சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளனர். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் மீனவர் பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்து வரும் சர்ச்சைக்குரிய விஷயமாகும். இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் பல சம்பவங்களில், பாக் ஜலசந்தியில் இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதுடன், அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

தமிழ்நாட்டையும் இலங்கையையும் பிரிக்கும் ஒரு குறுகிய நீர்ப்பரப்பான பாக் நீரிணை, இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களுக்கும் ஒரு செழிப்பான மீன்பிடித் தளமாகத் திகழ்கிறது. இந்த சூழலில் இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களும், அறியாமலேயே ஒருவருக்கொருவர் எல்லைக் குட்பட்ட நீர்ப்பரப்பில் அத்துமீறி நுழைந்ததாக கூறி அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர்.

இதனிடையே இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் சென்னை சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததும், முறையான மருத்துவ பரிசோதனைகள் மற்றும் குடிவரவு நடைமுறைகளுக்குப் பிறகு, தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் மூலம் தத்தம் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். முன்னதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனத்திடம் பேசிய இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா , இலங்கையில் உள்ள இந்திய மீனவர்களின் பிரச்சினை ஒரு தீராத பிரச்சினை என்றும்,இருதரப்பினரும் மீன்பிடித்தலையே தங்கள் வாழ்வாதாரமாகக் கொண்டிருப்பதால் இது விரைவில் தீராது. இதற்கான தீர்வு சட்டரீதியானது அல்ல, பொருளாதாரம் சார்ந்தது என்று நான் நினைக்கிறேன் என தெரிவித்திருந்தார்

# மணப்பாறை தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர் பி எல் விஜயகுமார் தீவிர வாக்கு சேகரிப்பு





திருச்சி. ஏப்.8–

திருச்சி மாவட்டம் மணப்பாறை சட்ட மன்றத்திற்கு உட்பட்ட வையம்பட்டி வடக்கு ஒன்றிய பகுதிகளால் ஆனையூர், கூடத்திப் பட்டி ,அமையபுரம், வீரப்பூர், வி. பூசாரிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் என்டிஏ கூட்டணி கட்சி வேட்பாளர் டாக்டர் பிஎல் விஜயகுமார் இன்று கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சேர்ந்து பரப்புரையில் ஈடுபட்டார். அப்போது பொதுமக்கள் அவரை ஆரத்தி எடுத்து நெற்றியில் குங்கும திலகமிட்டு வரவேற்றனர்.அதனை தொடர்ந்து பொதுமக்கள் மத்தியில் பேசிய அவர் கடந்த ஐந்து ஆண்டுகளாக சட்டம் ஒழுங்கு சீர்கேடு ஏற்பட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும், ஆனால் எம்ஜிஆர், ஜெயலலிதா எடப்பாடியார் ஆட்சியில் பாதுகாப்பு கட்டுக்கோப்பாக இருந்து என்றும் அந்த ஆட்சி மீண்டும் தொடர இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என பரப்புரை மேற்கொண்டார். அதேபோல் எடப்பாடி ஆட்சி அமைந்த உடன் கூடத்திப்பட்டி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ரேஷன் கடை வசதி ஏற்படுத்தி தரப்படும் என்றும் அமயபுரம் பகுதியில் தான் தான் முதல் முதலில் மருத்துவ இலவசம் மருத்துவ முகாம் நடத்தினேன் என்றும், இப்பதி இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கி கொடுத்துள்ளது என்றும் ஒரு சட்டமன்ற உறுப்பினராக நான் உங்களுக்கு சேவை செய்ய எனக்கு ஒரு முறை வாய்ப்பு தாருங்கள் என வேட்பாளர் டாக்டர் பி. எல் விஜயகுமார் பேசினார்.

# பட்டாபிராம் அரசு மாதிரி பள்ளியில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நீட் தேர்விற்கான உண்டு உறைவிட இலவச பயிற்சி வகுப்பு : மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தொடங்கி வைத்தார்



திருவள்ளூர் ஏப் 08 :

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம் பட்டாபிராம் அண்ணா நகர் பகுதியிலுள்ள அரசு மாதிரி பள்ளியில் மாவட்டம் நிர்வாகம் மற்றும் பள்ளிக்கல்வித் துறை சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நீட் தேர்விற்கான உண்டு உறைவிட இலவச பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தொடங்கி வைத்து மாணவ, மாணவிகளிடம் கலந்துரையாடி ஊக்கப் படுத்தி, தேவையான புத்தகத்தொகுப்புகளை வழங்கி பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கல்வி சேர்க்கையை அதிகரிக்கும் நோக்கில் நீட் தேர்விற்கான சிறப்பு உண்டு உறைவிட பயிற்சி வகுப்பு 06.04.2026 முதல் 01.05.2026 வரை மாவட்ட நிர்வாகத்தின் வழிகாட்டுதலின் கீழ் சிறப்பாக செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்பட்ட 50 அரசுப் பள்ளி மாணவர் களுக்கு. ஆவடி பகுதியில் உள்ள தனியார் பயிற்சி நிறுவனம் வாயிலாக தரமான நீட் பயிற்சி வழங்கப்படவுள்ளது. அனுபவமிக்க ஆசிரியர்கள் மூலம் திட்டமிட்ட வகுப்புகள், மீளாய்வு அமர்வுகள் மற்றும் மாதிரி தேர்வுகள் முறையாக நடத்தப்பட உள்ளது.

மாணவர்கள் தங்குவதற்கான பாதுகாப்பான குடியிருப்பு வசதி மற்றும் சத்தான உணவு வழங்கும் ஏற்பாடுகள் அருகிலுள்ள அரசு மாதிரி மேல் நிலைப்பள்ளி தண்டுரையில் செய்யப்பட்டுள்ளது. பயிற்சி மையம் மற்றும் தங்கும் இடத்திற்கு இடையே தினந்தோறும் சென்று வருவதற்கு போக்குவரத்து வசதியும் செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் சீரான மற்றும் ஒழுங்கு முறையான சூழலில் தங்கி பயில தேவையான அனைத்து வசதிகளும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், பாடவியல் நிபுணர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் இணைந்து பயிற்சி மையம் மற்றும் தங்கும் இடங்களில் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்களின் கல்வி முன்னேற்றம் உடல்நலம் மற்றும் ஒழுக்கம் ஆகியவை முறையாக பராமரிக்கப் படும். மாணவர்களுக் கான எழுது பொருட்கள் மற்றும் கற்றல் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது."அரசுப் பள்ளி மாணவர்கள் போட்டித் தேர்வுகளில் முன்னேற வேண்டும் என்பது மாவட்ட நிர்வாகத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த நீட் உண்டு உறைவிட பயிற்சி திட்டம் மாணவர்களின் நம்பிக்கையையும் திறனையும் உயர்த்தும். மாணவர்கள் இந்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி சிறந்த வெற்றியைப் பெற வேண்டும்" இந்த முயற்சி மூலம், அரசுப் பள்ளி மாணவர்கள் நீட் தேர்வில் சிறந்த முடிவுகளைப் பெற்று, மருத்துவக் கல்வியில் அதிக அளவில் சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இதில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) கோ.சுப்பராவ், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளிகள்) (பொ) லிங்கேஷ்வரன், பள்ளி தலைமையாசிரியர் லலிதா, தனியார் பயிற்சி நிறுவன பயிற்றுநர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மணப்பாறையில்100% வாக்குப்பதிவு விழிப்புணர்வு பேரணி




மணப்பாறையில்100% வாக்குப்பதிவு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் சூரியா நினைவு அறக் கட்டளை சமுதாயக் கல்லூரி இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. இந்த பேரணி, வையம்பட்டி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் சூரியா நினைவு அறக்கட்டளை சமுதாயக் கல்லூரியின் நிறுவனத் தலைவர் டாக்டர் சூரியா சுப்பிர மணியன் முன்னிலையில், சமூக நலத்துறை மாவட்ட அலுவலர் விஜயலக்ஷ்மி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சூரியா சமுதாயக் கல்லூரி தாளாளர் நாகலக்ஷுமி வரவேற்புரை வழங்கினார். இந்த பேரணியில் சூரியா சமுதாயக் கல்லூரி மாணவிகள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பொது மக்களும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மேலும், மணப்பாறை சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொறுப்பாளர், மணப்பாறை நகராட்சி நிர்வாகம், காவல்துறை மற்றும் போக்குவரத்து காவல் துறை, மணப்பாறை ரோட்டரி சங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மணப்பாறை பேருந்து நிலையத்திலிருந்து பெண்கள் மேல்நிலைப்பள்ளி வரை பேரணி நடைபெற்றது. பேரணியில் "100% வாக்குப்பதிவு", "வாக்கு விற்காதீர்", "எங்கள் ஓட்டு விற்பனைக்கு அல்ல", "வாக்களிப்பது எங்கள் உரிமை" போன்ற கோஷங்கள் எழுப்பப் பட்டன. போக்குவரத்து காவல்துறையின் பாதுகாப்புடன் பேரணி சிறப்பாக நடைபெற்றது. பேரணியில் தேர்தல் விழிப்புணர்வு பற்றிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது

# திருச்சி கே.கே.நகரில் கல்லூரி மாணவனுக்கு சரமாரி கத்திக்குத்து : 10 பேர் கும்பலுக்கு போலீஸ் வலைவீச்சு

திருச்சி ஏப்ரல் 8:

திருச்சி கே.கே நகர் மங்கம்மா சாலை ஐயப்பன் நகர் பிரசாத் தெரு பகுதியை சேர்ந்தவர் ரஞ்சித் இவர் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் பி சி ஏ படித்து வருகிறார் இவரது நண்பர் சக்திவேல் ஹரி இவர் கே.கே.நகர் பஸ் ஸ்டாண்ட அருகிலுள்ள ஒரு டீக்கடை முன்பு நின்று கொண்டிருந்தபோது

கே சாத்தனூரைச் சேர்ந்த கார்த்திக் என்ற கராத்தே கார்த்தி திருவர்ஷன் ரோகித் சூர்யா ரோஹித் உள்ளிட்ட 10 பேர் அவரிடம் தகராறு செய்து கொண்டிருந்தனர் இதை பார்த்த ரக்ஷித் அவர்களிடம் தட்டிக் கேட்டார் அப்போது ஆத்திரமடைந்த 10 பேர் கும்பலும் ரக்ஷித்தை கத்தியால் குத்தி தாக்கிவிட்டு தப்பி சென்றனர் இதில் அவரது இரண்டு கைகளிலும் பலத்த காயம் ஏற்பட்டது பின்னர் உறவினர்கள் அவரை மீட்டு திருச்சியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர் அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது இதுகுறித்து ரக்ஷித் கொடுத்த புகாரின் அடிப்படையில் கார்த்திக் உள்ளிட்ட நான்கு பேர் மற்றும் அடையாளம் தெரியாத 6 தேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் சு. முத்துசாமி ஆதரித்து பிரச்சாரம்.

## திமுக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அணி சார்பில் தேர்தல் பிரச்சாரம் தீவிரம்..



ஈரோடு. ஏப்ரல். 08

ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமியை ஆதரித்து திமுக சிறுபான்மையினர் நலப்பிரிவு அணி சார்பில் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்யப்பட்டது.

வருகின்ற 23ஆம் தேதி தமிழ்நாடு சட்ட மன்ற தொகுதிக்கான பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது.

இதில் தமிழகத்தில் உள்ள திமுக கூட்டணி மற்றும் அதிமுக கூட்டணி கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து அவர்கள் களத்தில் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மதசார் பற்ற கூட்டணியின் திமுக வேட்பாளர் அமைச்சர் சு. முத்துசாமியை ஆதரித்து பல்வேறு அமைப்புகள் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து திமுக சிறுபான்மையினர் நலப்பிரிவு அணில் சார்பில் அவர் ஆதரவாக தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது.

இதில் அந்த அமைப்பின் ஈரோடு மாநகர அமைப்பாளர் ஜெ. சந்தோஷ் டோமினிக் தலைமையில் அந்த அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் தொகுதியின் பல்வேறு இடங்களில் திமுக வேட்பாளர் அமைச்சர் சோ. முத்துசாமிக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் அந்த அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருச்சி உறையூரில் அடிக்கடி செல்போன் பேசுவதை கண்டித்ததால் 9ம் வகுப்பு மாணவி மாயம் :

திருச்சி ஏப்.8

திருச்சி உறையூர் பகுதியை சேர்ந்தவர் கலா ( வயது 14). பெயர் மாற்றப்பட்டுள்ளது இவர் அங்குள்ள ஒரு பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறார். இவரது தந்தை கருத்து வேறுபாடு காரணமாக தனியாக பிரிந்து சென்று விட்டார்.

தாயார் துபாயில் வேலை பார்த்து வருகிறார் இதனால் கலா அங்குள்ள பாட்டி வீட்டில் தங்கி இருந்து பள்ளிக்கு சென்று வந்தார் சமீபகாலமாக அடிக்கடி செல்போனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார் இதை பார்த்த அவரது சித்தியும் பாட்டியும் அவரை கண்டித்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் வீட்டிலிருந்து வெளியே சென்றார் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை இது குறித்து அவரது சித்தி உறையூர் போலீசில் கொடுத்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாயமான மாணவியை தேடி வருகின்றனர்.

# உலக சுகாதார தினத்தையொட்டி 30 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள்: ரெட் கிராஸ் சார்பில் வழங்கப்பட்டது





வந்தவாசி , ஏப் 08:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் உலக சுகாதார தினத்தையொட்டி ரெட் கிராஸ் சங்கம் சார்பில் 'உடல் நலமும் மன நலமும்' விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு நிலைய மருத்துவர் டாக்டர். கார்த்திகேயன் தலைமை தாங்கினார். ரெட் கிராஸ் சங்க செயலாளர் பா. சீனிவாசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஓய்வு பெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குனர் டாக்டர் எஸ்.குமார் பங்கேற்று, உடல் நலமும் மனநலமும் பற்றிய விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கினார். மேலும் மேலும் நாம் கடைபிடிக்க வேண்டிய சுகாதார செயல்பாடுகள் பற்றிய தகவல்களை விளக்கினார். நிகழ்வில் 30 கர்ப்பிணி தாய் மார்களுக்கு ஊட்டச் சத்து பொருட்கள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ரெட் கிராஸ் சங்க உறுப்பினர்கள் பெ.பார்த்திபன், பிடிஜி ஆறுமுகம், கு.சதானந்தன், ஜி.விநாயகமூர்த்தி, க.வாசு, மலர் சாதிக், ரயில்வே சு.தனசேகரன், கேப்டன் பிரபாகரன், என்.பி.ராமு, மனோஜ் குமார், ஆசிரியர் மகாவீர் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் சுகாதார நிலைய முதன்மை செவிலியர் ஸ்டெல்லா மேரி நன்றி கூறினார்.

# கோடைக்காலம் தொடங்கி உள்ளதால் குழந்தைகளுக்கு சின்னம்மை நோய் தடுப்பூசி போட சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

வேலூர்: ஏப்.8–

தமிழ்நாட்டில் வழக்கமாக ஏப்ரல் மாதத்தில் இருந்து கோடை வெயிலின் தாக்கம் அதிகரிக்கத் தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்தே வெயிலின் தாக்கம் அதிகமாகி விட்டது. இதனால், வெயில் காலத்தில் மக்களுக்கு வரக்கூடிய தட்டம்மை, சின்னம்மை மற்றும் பொன்னுக்கு வீங்கி போன்ற நோய்களின் தாக்கம் தமிழ்நாடு முழுவதும் சமீப நாட்களாக அதிகரித்து வருகிறது. எனவே குழந்தைகளுக்கு சின்னம்மை நோய் வராமல் தடுக்க தனியார் மருத்துவமனைகளில் சின்னம்மை தடுப்பூசியை போட்டுக் கொள்ளலாம் என்று பொது சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது: சின்னம்மை நோய், ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவக்கூடியது. பாதிக்கப்பட்டவர் இருமும்போது தும்மும்போது வெளிவரும் காற்று துளிகள் வாயிலாகவும், கொப்பளங்களில் இருந்து வரும் திரவத்தை தொடுவதாலும், அவர்கள் பயன்படுத்திய உடைகள், பாத்திரங்கள் போன்றவற்றை பயன்படுத்து வதாலும் சின்னம்மை பரவுகிறது. இந்த நோய் பொதுவாக லேசான காய்ச்சல், சோர்வு தளர்ச்சி, பசியின்மை ஆகிய அறிகுறிகளுடன் துவங்கும். பின் உடலில் சிறிய நீர் திவலைகள் போன்ற கொப்பளங்கள் தோன்றி உடலெங்கும் பரவும். ஓரிரு நாட்களில் வெடித்து பின் உடைந்து காய்ந்து விடும். சின்னம்மையானது பெரியவர்களுக்கு சிறிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தும். கர்ப்பிணிகள், பச்சிளம் குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர் ஆகியோருக்கு தீவிர பாதிப்பு ஏற்படலாம். எனவே, குழந்தைகளுக்கு அந்நோய் வராமல் இருக்க தனியார் மருத்துவமனைகளில் சின்னம்மை தடுப்பூசியை போட்டுக் கொள்ளலாம். அரசு மருத்துவமனைகளில் கொடுக்கப்படும் தேசிய தடுப்பூசி திட்டத்தில், சின்னம்மை தடுப்பூசி கிடையாது. பாதிக்கப்படும் குழந்தைகளின் அனைத்து கொப்புளங்களும் காய்ந்து விழும் வரை 10 நாட்கள் வரை வீட்டில் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.





வில்லியனூர் தொகுதி வெற்றி வேட்பாளர் அண்ணன் ஆர் சிவா அவர்களுக்கு கொம்பாக்கம் துர்கா நகர் பகுதியில் திமுக பிரமுகர் ஆர் ரமேஷ் தலைமையில் வாக்கு சேகரித்த தருணம்



காமராஜர் நகர் தொகுதி முழுவதும் என்னார் காங்கிரஸ் தொகுதி தலைவர் தணிகைவேல் என்ற குமார் தலைமையில் கூட்டணி கட்சி ஜே சி எம் கட்சித் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களுக்கு காமராஜர் நகர் தொகுதி முழுவதும் என் ஆர் காங்கிரஸ் முக்கிய நிர்வாகிகள் மகளிர்கள் மற்றும் இளைஞர்கள் என பல தொகுதி முழுவதும் வாக்கு சேகரித்தனர் இதில் அவர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது

# ஈரோடு மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மதிமுக தேர்தல் பணிமனை திறப்பு விழா..

## அதிக வாக்கு வித்தியாசத்தில் வேட்பாளர் ச. செந்தில் நாதனை வெற்றி பெற வைக்க தொண்டர்களுக்கு வேண்டுகோள்..





ஈரோடு. ஏப்ரல். 08

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் திமுக கூட்டணி மதிமுக தேர்தல் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தமிழகத்தில் வருகின்ற 23ஆம் தேதி 2026 காண சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் திமுக தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் ஒரு அணியாகவும், அதிமுக பாஜக தலைமையில் உள்ள தேசிய முற்போக்கு கூட்டணி ஒரு அணியாகவும், மற்றும் சீமான் தலைமையில் நாம் தமிழர் கட்சி, நடிகர் விஜய் தலைமையில் தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட கட்சிகளும் தேர்தல் களத்தில் உள்ளது.

இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் மத சார்பற்ற ஜனநாயக கூட்டணியின் மதிமுக வேட்பாளராக ச. செந்தில் நாதன் போட்டியிடுகிறார்.

இவர் திமுக, மதிமுக, விடுதலை சிறுத்தைகள், தேசிய முற்போக்கு திராவிட கழகம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு மொடக்குறிச்சி தொகுதி முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று காலை மொடக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகம் அருகே தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது.

இதற்கு கலந்து கொண்டு ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளரும் அமைச்சருமான சு. முத்துசாமி தேர்தல் பணிமனையை திறந்து வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசும்போது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் 62 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்று இருந்தோம். இந்த தேர்தலில் அதைவிட கூடுதலாக வாக்குகள் பெற அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும்.

மொடக்குறிச்சி தொகுதியில் வெற்றியை தலைவர் ஸ்டாலின் கரங்களில் வழங்க வேண்டும் அதற்காக இந்தத் தொகுதியை சேர்ந்த நீங்கள் அனைவரும் சிறந்த முறையில் பாடுபட வேண்டும். இவ்வாறு அமைச்சர் முத்துசாமி தொண்டர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், வேட்பாளர் ச. செந்தில்நாதன், எஸ் எல் டி சச்சாதானந்தம், காங்கிரஸ் முன்னாள் எம்எல்ஏ பழனிசாமி, ஒன்றிய செயலாளர் சு. குணசேகரன், பேரூர் செயலாளர் சரவணன் உள்ளிட்ட திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# அதிமுக இளைஞரணி நிர்வாகி தியாகு தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணைந்தனர்




திருவள்ளூர் ஏப் 08 :

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் வி.ஜி.ராஜேந்திரன் 3வது முறையாக போட்டியிடுகிறார். இந்நிலையில் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து கிராமம் கிராமமாக திமுக அரசின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துச் சொல்லி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இந்நிலையில் திருவள்ளூர் ஜே.என்.சாலையில் திமுக வேட்பாளர் அலுவலகத்தை திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் திமுக ராஜ்யசபா எம்பி., ஆலந்தூர் எஸ்.பாரதி கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கட்சி நிர்வாகிகளுடன் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அதனைத் தொடர்ந்து கட்சி அலுவலகத்தில் அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவள்ளூர் மேற்கு மாவட்ட அதிமுக இளைஞரணி இணை செயலாளர் தியாகு தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் அதிமுகவிலிருந்து விலகி திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர். திமுகவில் இணைந்து அனைவருக்கும் திமுக துண்டு அணிவித்துவரவேற்றார்.

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் திமுகவின் வெற்றிக்கு பாடுபட வேண்டும் என கேட்டுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நகர்மன்றத் தலைவர் பொன். பாண்டியன் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் வி.இ.ஜான் அயூப் அலி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் இருந்தனர். கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் மாணவர்கள், பெண்கள், முதியோர்கள் என அனைத்து தரப்பு மக்களுக்கும் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தியதால் மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி அமையவும், 2 முறை அதிமுகவை தோற்கடித்து 3 வது முறையாக போட்டியிடும் வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரன் வெற்றி பெற அயராது பாடுபட உறுதி ஏற்று இருப்பதாக திமுகவில் இணைந்த தியாகு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# மக்கள் நல கூட்டணி வேட்பாளர் ஜே.சுப்ரமணியனை ஆதரித்து உப்பளம் தொகுதியில் ஆர் எல் வெங்கட்ராமன் ஓட்டு வேட்டை .!!!.



புதுச்சேரி, ஏப்.8–

நடைபெறவிருக்கிற சட்டமன்ற தேர்தலில் மூன்றாவது அணியாக ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் கூட்டணி சசிகலாவின் அனைத்து இந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து மக்கள் நல கூட்டணி சார்பாக வேட்பாளர்கள் அறிவிக்கப் பட்டது. அதன் படி உப்பளம் சட்டமன்ற தொகுதியில் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழக கூட்டணி, சசிகலாவின் தலைமையிலான கூட் டணி உடன் இணைந்து மக்கள் நல கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட் பாளர் J.சுப்பிர மணியன் அவர்களை ஆதரித்து மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் அவர்கள் வைரம் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு வீடு வீடாக சென்று மக்கள் மத்தியில்வாக்குசேகரித்தார்.

அப்போது மக்கள் மத்தியில் பேசும்போது புதுச்சேரியில் 70 ஆண்டு காலம் ஆட்சி செய்து மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தி வந்த அரசியல் வாதிகளை அடையாளம் கண்டு நல்ல சட்டமன்ற உறுப்பினர்களை உருவாக்க ஒரே ஆயுதம் ஓட்டு தான் . அந்த வாய்ப்பு மீண்டும் மக்களுக்கு கிடைத்துள்ளது. அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும் மக்களுக்காக இவ்வளவு நல்லது செய்துள்ளோம் என்று மார்தட்டிக் கொள்ளும் ஆட்சியாளர்கள் மாநில அந்தஸ்து இல்லை என்று கூறிய மத்திய ஆட்சியாளர்களுடன் இணைந்து மக்களை சந்திப்பது எந்த விதத்தில் நியாயம். மாநில அந்தஸ்து மற்றும் உள்ளாட்சி தேர்தல் நடத்தாமல் சட்டமன்ற தேர்தலை அறிவித்தால் தேர்தலை புறக்கணிப் போம் என்று கூறிய ரங்கசாமி மற்றும் எதிர்க்கட்சிகள் எங்கே போனார்கள். அனைவரும் வாய்மூடி மவுனியாக இருக்கிறார்கள். மக்களை ஏமாற்ற நீலி வேஷம் போடுகிறார்கள். இவையெல்லாம்மாறினால் தான் மக்கள் சுபிட்சமாக இருக்க முடியும். இதற்காகத்தான் நான் எனது 49 வருட அரசியல் அனுபவத்தை கொண்டு ஒரு நல்ல வேட்பாளரை உங்களுக்கு ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மக்கள் நல கூட்டணி வேட்பாளராக J.சுப்ரமணியன் அவர்களை உங்களுக்கு அடையாளம் காட்டி உள்ளேன். உப்பளம் தொகுதியில் உள்ள குறைகளை போக்கவும் மக்களுக்கான நல்ல திட்டங்களை நிறைவேற்றவும், வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்கவும் உப்பளம் தொகுதியை மக்களின் உயர்வுபெற்ற தொகுதியாக மாற்றவும் J. சுப்ரமணியன் அவர்களுக்கு வைரம் சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றியடைய செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பிரச்சாரத்தில் கோமதி சங்கர், கவிதா, மகளிரணி தலைவி வாசுகி, , அமுதா, ஜெயா, ஸ்ரீதர் , , மற்றும் கூட்டணி கட்சியை யை சேர்ந்த வர்கள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

# புதுச்சேரியில் 9ம் தேதி ஜிப்மர் மருத்துவமனையின் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது

புதுச்சேரி: ஏப்.8–

புதுச்சேரியில் தேர்தல் நாளான வரும் 9ம் தேதி ஜிப்மர் மருத்துவமனையின் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என அறிவித்துள்ளது. அன்றைய தினம் வெளிப்புற சிகிச்சை நோயாளிகள் வருவதை தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு கோரிக்கை வைத்துள்ளது. எனினும் அவசரபிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல் இயங்கும்




நாடாளு மக்கள் கட்சியின் புதுச்சேரி அறியாங்குப்பம் வேட்பாளர் ரத்தினம் இறுதி கட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்

# பாலக்கரையில் மதுவுக்கு அடிமையான வாலிபர் திடீர் சாவு :

திருச்சி ஏப்ரல் 8

திருச்சி சங்கிலியாண்ட புரம் தெரசம்மாள் தெரு பகுதியைச் சேர்ந்தவர். வாசுதேவன் இவரது மகன் ஆனந்தகுமார் (வயது 25 )பெயிண்டர் திருமணமாகாத இந்த வாலிபருக்கு மது அருந்தும் பழக்கம் ஏற்பட்டது .ஒரு கட்டத்தில் மதுவுக்கு அடிமையான இவர் சரியாக வேலைக்கு செல்லாமல் மது அருந்தி வந்தார் .பின்னர் மது போதையில் முதலியார் சத்திரம் அங்கன்வாடி பகுதியில் மயங்கி கிடந்தார், பின்னர் அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது ஏற்கனவே அவர் இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அவரது தாயார் மல்லிகா கொடுத்த புகாரின் அடிப்படையில் பாலக்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற அரசு உயர்நிலைப் பள்ளி ஆண்டுவிழா..!



வந்தவாசி, ஏப் 08:

திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் வட்டம், வந்தவாசி அடுத்த நடுக்குப்பம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் பெ.ஜெய்சங்கர் தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழகம் தலைவர் வே. அரங்கநாதன், பள்ளி மேலாண்மை குழு தலைவி வெ.மேகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர். அறிவியல் ஆசிரியர் கண்ணன் வரவேற்றார். நிகழ்வில் 28 புரவலர்களுக்கு சால்வை அணிவித்து, சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மேலும் 100% வருகை, அறிவியல் கண்காட்சியில் சிறப்பிடம், வகுப்புகளில் சிறப்பிடம், விளையாட்டுகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப் பட்டது. மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. தமிழாசிரியர் மு.வெற்றிவேல் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஆசிரியர்கள் மாலதி, சிவராமன், பார்த்திபிரபு, செந்தாமரைச் செல்வி, இராஜபெருமாள், இளம்பூரணன், மாணிக்கம், ஜோதி, மாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் கணித ஆசிரியர் அ.பொ. அண்ணாமலை நன்றி கூறினார்.

# சிதம்பரம் தொகுதியில் தவெக வேட்பாளர் பாரியின் வேட்புமனு தள்ளுபடி

சிதம்பரம்: ஏப்.8–

சிதம்பரம் தொகுதியில் தவெக வேட்பாளர் பாரியின் வேட்புமனு தள்ளுபடி செய்தார். தவெக வேட்பாளர் பாரி வேட்பு மனுவில் எழுத்துப் பிழை மற்றும் முழுமையாக நிரப்பவில்லை என புகார். மனுவில் எழுத்துப்பிழை இருப்பதாகக் கூறி தேர்தல் நடத்தும் அதிகாரி வேட்புமனுவை நிராகரித்தார்

# திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் 2 முறை அதிமுகவை வீழ்த்தி 3வது முறையாக போட்டியிடும் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து எம்பி கனிமொழி பிரச்சாரம்



திருவள்ளூர் ஏப் 08 :

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் 2 முறை அதிமுகவை வீழ்த்தி 3வது முறையாக போட்டியிடும் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து எம்பி கனிமொழி இன்று பிரச்சாரம் மேற்கொண்டார். திருவள்ளூர் அடுத்த கனகம்மாசத்திரம் பகுதியில் நடைபெற்ற இந்த பிரச்சாரத்தின் போது எம்பி கனிமொழி பேசும் போது, இந்த தேர்தல் திமுகவிற்கும் டெல்லிக்குமான தேர்தல் இல்லை, .தமிழ்நாட்டிற்கும் தேசிய ஜனநாயக கூட்டணிக்குமான தேர்தல் என்பதை முதல்வர் தெளிவுபடுத்தியுள்ளார். எதிர் கூட்டணியில் உள்ளவர்கள் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்து கொண்டிருப்பவர்கள்.

ஒன்றிய அரசு விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் எதிராக திட்டங்களை கொண்டு வந்தவர்கள் என்றும், 100 நாள் வேலைக்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தியதோடு, இன்று 100 நாள் வேலை திட்டத்தையும் நிறுத்தி விட்டதாகவும், அவர்களோடு கைகோர்த்து நிற்கக்கூடிய எடப்பாடி பழனிச்சாமி இதற்கெல்லாம் எதிர்ப்பு தெரிவித்து எந்த கேள்வியும் கேட்க மாட்டார் என்றும் குற்றம் சாட்டினார். திமுக ஆட்சியில் குற்றங்கள் பெருகிவிட்டது என்று குற்றம் சாட்டினார்கள். தமிழ்நாட்டில் அதிமுக ஆட்சியில் நடந்த குற்றங்கள் 3 லட்சத்து 22 ஆயிரத்து 852 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் திமுக ஆட்சியில் ஒரு லட்சத்துக்கும் மேலாக குறைக்கப்பட்டு 2 லட்சத்து 3 ஆயிரத்து 804 குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்படி மிக மோசமான ஆட்சியை நடத்தியவர் தான் எடப்பாடி பழனிச்சாமி என்றும், தமிழ்நாட்டிற்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் துரோகம் செய்யக்கூடியவர்கள் நம் எதிர் அணியில் உள்ளதாகவும், திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வேட்பாளரை எதிர்த்து நிற்கக் கூடிய பி வி ரமணாவை குட்கா உடன் இணைத்து குட்கா ரமணா என்று அழைத்தால் தான் தெரியும் என்றும் அளவிற்கு பேசக்கூடிய நபராகவும், எதை விற்கக் கூடாது என்று சொல்கிறார்களோ அதை விற்பதற்காக உதவி செய்ததற்காக சிபிஐயால் வழக்குப் பதிவு செய்யப்பட்டவர் தான் பி.வி ரமணா என்றும் குற்றம் சாட்டினார். அதனைத் தொடர்ந்து கடந்த 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு இருப்பதாகவும், அந்த பணிகள் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சாதனைகளை செய்து விட்டு தான் தற்போது உங்களிடம் வாக்குகளை கேட்டு வந்துள்ளதாகவும் தெரிவிதத் அவர், உங்களுக்கு மகளிர் உரிமைத்தொகை ஆயிரம் ரூபாய் வழங்குவேன் என்று சொன்ன நமது முதலமைச்சர் கொடுத்துள்ளார். அடுத்த முறை நமது ஆட்சி தான் வரும் போது நிச்சயம் உங்களுக்கு 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி தருவார் என்றும், அதிமுக ஆட்சியில் செல்போன் தருவதாக சொன்னார்கள் ஆனால் யாருக்கும் தரவில்லை. தற்போது பிரிட்ஜ் தருகிறேன், வாஷிங் மெஷின் தருகிறேன் என்று அதிமுகவினர் தெரிவிக்கின்றனர். ஆனால் திமுக சார்பில் முதலமைச்சர் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் பெண்களுக்கு 8000 ரூபாய்க்கான கூப்பன் தருகிறேன் என்றும், அதற்கு என்ன வேண்டுமோ அதை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறியிருப்பதால் நீங்கள் விருப்பப்பட்டதை வாங்கிக் கொள்ளுங்கள் என்றும் திமுக தேர்தல் வாக்குறுதிகளை பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லி திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

# ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் சு. முத்துசாமி தீவிர தேர்தல் பிரச்சாரம்..

## இஸ்லாமிய பெண்கள் இடையே பெருகிவரும் ஆதரவு...





ஈரோடு. ஏப்ரல் 08

நடைபெற இருக்கின்ற சட்டமன்ற பொது தேர்தலில் ஈரோடு மேற்கு தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமிக்கு இஸ்லாமிய பெண்கள் இடையே ஆதரவு பெருகி வருகிறது. தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 இந்த மாதம் 23ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. தொடர்ந்து மே 04 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

இந்த நிலையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தங்களின் வேட்பாளர்களை அறிவித்து தேர்தல் களத்தில் தீவிரமாக பணியாற்றி வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டம், ஈரோடு மேற்குத் தொகுதியில் போட்டி யிடும் அமைச்சர் சு. முத்துசாமி தொகுதி முழுவதும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

அவர் நேற்று காலை நாடார் மேடு, அண்ணமார் பெட்ரோல் பங்க் பாரதிநகர் உள்ளிட்ட 25 இடங்களில் திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி தேர்தல் பிரச்சாரம் செய்தார்.

அப்பொழுது பாரதி நகர் பகுதியில் பிரச்சாரம் செய்த போது அங்கிருந்த இஸ்லாமிய பெண்கள் அவருக்கு ஆர்த்தி எடுத்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

தொடர்ந்து அப்பகுதி சேர்ந்த இஸ்லாமிய மக்கள் திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்த தேர்தல் பிரச்சாரத்தில் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் ரங்கசாமி தட்டாஞ்சாவடி தொகுதியில் தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார் உடன் N.R.காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டணி கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதியில் போட்டியிடும் முன்னாள் முதலமைச்சர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் வைத்தியலிங்கம் தனது இறுதி கட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.




புதுச்சேரி உப்பளம் தொகுதியில் அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் தனது பிரச்சாரத்தை நிறைவு செய்தார்.

# த.வெ.க வேட்பாளர் வேட்பு மனு ஏற்பு



மணப்பாறை சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் ஆர். கதிரவன் வேட்பு மனு தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெய சித்ரகலாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது

# செம்மரக்கட்டைகள் வாங்கி விற்பனை செய்வதற்கு ஒப்புதல் சான்றிதழ் அளிக்க ரூ.50 ஆயிரம் லஞ்சம் பெற்ற வனச்சரக அலுவலரை லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர்

திருவள்ளூர் ஏப் 08 :

திருவள்ளூர் அருகே புல்லரம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த செம்மரக்கட்டை வியாபாரி சாந்தி. இவர் பூண்டி ஒன்றியம், திம்மபூபாலபுரத்தைச் சேர்ந்த விவசாயி வெங்கட்ராஜிடம் 146 செம்மரங்களை விலைக்கு வாங்கியுள்ளார்.



இந்த செம்மரங்களை வெட்டி எடுத்து விற்பனைக்காக கொண்டு செல்வதற்காக திருவள்ளூர் ஊத்துக்கோட்டை சாலையில் செயல்பட்டு செங்குன்றம் வனச்சரக அலுவலர் சரவணனிடம் ஒப்புதல் சான்றிதழ் கேட்டுள்ளார். அப்போது, ஒப்புதல் சான்றிதழ் அளிக்க அவரிடம் ரூ.1 லட்சம் தரவும் என வனச்சரக அலுவலர் கேட்டாராம். அதைத்தொடர்ந்து முதல் கட்டமாக ரூ.50 ஆயிரம் தருவதாக கூறினாராம்.

பின்னர் இதுகுறித்து சாந்தி திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாருக்கு தகவல் அளித்தாராம். அதன்பேரில் லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் அவருக்கு ஆலோசனை வழங்கினர். அதன் அடிப்படையில் வனச்சரக அலுவலரிடம் ரசாயனம் தூள் தடவிய ரொக்கத்தை சாந்தி கொடுத்தாராம். அப்போது அங்கு மறைந்திருந்த திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையிலான போலீசார் வனச்சரக அலுவலர் சரவணனை கையும், களவுமாக பிடித்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைத்தனர்.

# திருச்சி சத்திரம்பஸ் நிலையம் பகுதியில் வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக வாலிபர்களிடம் ரூ. 3.60 லட்சம் மோசடி:

திருச்சி ஏப்ரல் 8

திருச்சி சத்திரம் பஸ் நிலையம் பகுதியில் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பும் ஒரு தனியார் ஏஜென்சி செயல்பட்டு வருகிறது இதன் உரிமையாளர்கள் ஸ்டீபன் சையது ஆகியோர் மயிலாடுதுறை மாவட்டம் மணல்மேடு நடுத்தெரு பகுதியைச் சேர்ந்த சபரி ராஜன் ( வயது 22) என்பவரை அணுகினர் பின்னர் அவரிடம் துபாயில் நல்ல சம்பளத்தில் எலக்ட்ரீசியன் வேலை இருப்பதாக கூறினர் இதை நம்பிய சபரி ராஜன் மற்றும் அவரது நண்பர்கள் சதீஷ்குமார் விக்னேஷ் குமார் ஆகிய மூன்று பேரும் அந்த ஏஜென்சிக்கு நேரில் சென்று ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் ஒரு லட்சத்து 20 ஆயிரம் பணத்தை செலுத்தினர்.

அதன் பின்னர் வேலைக்கு அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பவில்லை இன்று நாளை என சுமார் ஓராண்டு காலம் காலம் தாழ்த்தி வந்தனர் இதனால் பாதிக்கப்பட்ட சபரி ராஜன் கோட்டை குற்றப்பிரிவு போலீசில் புகார் செய்தார் அதன் பேரில் போலீசார் ஸ்டீபன் மற்றும் சையது ஆகிய இரண்டு பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருச்சி உய்யக்கொண்டான் திருமலையில் போதை மாத்திரைகளுடன் சிக்கிய இரண்டு ரவுடிகள் மோட்டார் சைக்கிள் பறிமுதல்:

திருச்சி ஏப்ரல் 8

திருச்சி உய்யகொண்டான் திருமலை பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் விற்கப்படுவதாக போலீசாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் வினோத் மற்றும் போலீசார் உய்யக் கொண்டான் திருமலை மாநகராட்சி பூங்கா பகுதியில் வாகன சோதனை நடத்தினர் .அப்போது பாலக்கரை முதலியார் சத்திரம் ஆலம் தெரு பகுதியைச் சேர்ந்த ரவுடி பிரதீப் என்கிற பிரதீப் ராஜ் வயது 23 மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த மற்றொரு ரவுடி ஆகாஷ் என்கிற பெஞ்சமின் ஆகாஷ் 23 ஆகியோர் ,மோட்டார் சைக்கிளில் வந்தனர் பின்னர் அவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி வாகனத்தை பரிசோதனைக்கு உட்படுத்திய போது

பெட்ரோல் டேங்க் கவரில் 200 போதை மாத்திரைகள் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது .அதைத் தொடர்ந்து போலீசார் இரண்டு ரவுடிகளையும் கைது செய்து ரூபாய் 40 ஆயிரம் மதிப்பிலான போதை மாத்திரைகளை கைப்பற்றி மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்தனர்.



வீரப்பூரில் பொன்னர் சங்கருக்கு மணிமண்டபம் அமைத்து தருவேன் மணப்பாறை அதிமுக வேட்பாளர் டாக்டர் பி எல் விஜயகுமார் பூசாரிபட்டியில் தேர்தல் பிரச்சாரத்தில் வாக்குறுதி

# அதிமுக வேட்பாளர் வேட்பு மனு ஏற்பு



மணப்பாறை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் டாக்டர். பி.எல். விஜயகுமார் வேட்பு மனு தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெயசித்ரகலாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது

# திமுக வேட்பாளர் வேட்பு மனு ஏற்பு!



மணப்பாறை சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி வேட்பாளர் ப. அப்துல் சமத் வேட்பு மனு தேர்தல் நடத்தும் அலுவலர் ஜெயசித்ரகலாவால் ஏற்கப்பட்டது




துவரங்குறிச்சி அடுத்த தெத்தூர் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அலுவலர் கண்ணன் தலைமையில் பறக்கும் படை அதிகாரிகள் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி சோதனை செய்ததில் கணக்கில் வராத 4 , 90,000 பணத்தை பறிமுதல் செய்து தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421